நீலகிரி மாவட்டம் உதகமண்டலம் நிலஅளவை பதிவேடுகள் துறை, உதவி இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவரது நேர்முக உதவியாளர் அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் : திரு.ந.கோபாலகிருஷ்ணா.,

ந.க. அ3 /277 / 2024

நாள் : 01.02.2024

பொருள்: பணிவரன்முறை - நிலஅளவை பதிவேடுகள் துறை - நீலகிரி மாவட்டம் - திருமதி.எ.ரேவதி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் வழங்கப்பட்டது - நபரை இளநிலை உதவியாளர் இனத்தில் பணிவரன்முறை செய்து உத்திரவிடல் - தொடர்பாக.

பார்வை: 1)சென்னை நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் அவர்களின் கடிதம் எண் ந.க. ர1-26034-2022(1), நாள்- 03.10.2022

2)நீலகிரி மாவட்ட நிலஅளவைப் பதிவேடுகள் துறை உதவி இயக்குநரின் செயல்முறை ஆணை ந.க அ2/ 4808/2022 நாள் – 07.10.2022

3)நீலகிரி மாவட்ட நிலஅளவைப் பதிவேடுகள் துறை உதவி இயக்குநரின் ந.க அ3/ 2178/2023, நாள் – 12.06.2023

4)அரசாணை (நிலை) எண்-33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ-1) துறை நாள்- 08.03.2023

5)அரசுக் கடிதம் எண் 5532/G2/2023-1, மனித வள மேலாண்மைத் (G2) துறை நாள்- 20.09.2023

6)சென்னை நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட கூடுதல் இயக்குநர் அவர்களின் ந.க. ர1-15086-2023, நாள்- 14.01.2024

*************

<u>ஆணை-</u>

நீலகிரி மாவட்ட நிலஅளவைப் பதிவேடுகள் துறையில் முதுநிலை வரைவாளராக பணிபுரிந்து பணியில் இருக்கும் போது 26.09.2019 அன்று மரணம் அடைந்த அ.வசந்தா என்பவரது வாரிசுதாரதான மகள் திருமதி.எ.ரேவதி என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கிட கோரி உரிய காலவரம்பிற்குள் மனு சமர்ப்பித்துள்ளார். கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் பெற அனைத்து தகுதிகளையும் தனியர் பெற்றிருந்ததால் பார்வை (1)-இல் காணும் இயக்கக கடிதம் மற்றும் பார்வை (2)-இல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணைகளின்படி நீலகிரி மாவட்ட நிலஅளவைப் பதிவேடுகள் துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு 07.10.2022 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். திருமதி.எ.ரேவதி என்பவரை இளநிலை உதவியாளர் இனத்தில் 07.10.2022 முற்பகல் முதல்

வரன்முறை செய்திட வேண்டி பார்வை (3)-இல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் சென்னை இயக்குநரகத்திற்கு பிரேரணை அனுப்பப்பட்டது.

பார்வை (6)-இல் காணும் சென்னை இயக்குநரக கடிதத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் பெற்ற திருமதி.எ.ரேவதி என்பவரை இளநிலை உதவியாளர் இனத்தில் பணிவரன் முறை செய்வது தொடர்பாக பார்வை (4)-இல் காணும் அரசாணையின் விதிகள் மற்றும் பார்வை (5)-இல் காணும் அரசுக் கடிதத்தில் பத்தி 3 மற்றும் 5-இல் கீழ்க்கண்டவாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

பத்தி -3 The Services of the Government Servants who are appointed or yet to be appointed on compassionate Grounds, shall be regularized as per the Tamil Nadu civil Services (Appointment on compassionate Ground) Rule 2023.

பத்தி -5 In view of the above rule position herein after relaxation of Tamil Nadu Government Servants (conditions of Services) Act, 2016/ Tamil Nadu Civil Services (Appointment on compassionate Ground) Rules, 2023 shall not be necessitated in respect of minimum age, Married Daughter, Unmarried Brother / Sister of the unmarried deceased Government Servant. To be appointed / appointed prior to commencement of the said Tamil Nadu Civil Services (Appointment on compassionate Ground) Rules, 2023.

However, relaxation shall arise to Tamil Nadu Civil Services (Appointment on compassionate Grounds) Rules, 2023 for application submitted beyond three years, Maximum Age, Alternate application alone.

எனவே, மேற்காண் வழிகாட்டுதல்களின்படி முடிவு செய்து உரிய ஆணைகள் பிறப்பிக்க தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து நபரது பணியினை நபர் இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 07.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் இனத்தில் பணிவரன் முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

1/2

உதவி இயக்குநர்,
நிலஅளவைப் பதிவேடுகள் துறை,
உதகமண்டலம்.

பெறுநர்

திருமதி.எ.ரேவதி, இளநிலை உதவியாளர்
(கண்காணிப்பாளர் -1 மூலமாக)

நகல் - மண்டலத்துணை இயக்குநர், நிலஅளவைப் பதிவேடுகள் துறை,
கோவை 18 தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் - கூடுதல் இயக்குநர், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையரகம்,
(நிலஅளவைப் பிரிவு) சென்னை -5 தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது

நகல் - கண்காணிப்பாளர் 1 மற்றும் 2

நகல் - அனைத்து இருக்கைக்கும் புதிய எண்ணில்